www.freetnbooks.com

6

Register No.

# இரண்டாம் பருவத் தேர்வு - 2025

நேரம் : 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 60

பகுதி -1 பிரிவு –I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6x1=6

1. பிறரிடம் நான் ----- பேசுவேன்

அ)கடுஞ்சொல் ஆ)இன்சொல் இ)வன்சொல் ஈ)கொடுஞ்சொல்

2. 'உதித்த' என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் —

அ)மறைந்த ஆ)நிறைந்த இ)குறைந்த ஈ)தோன்றிய

3. பயன் + இலா என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------

அ)பயனிலா ஆ)பயன்னில்லா இ)பயன்இலா ஈ)பயன்இல்லா

4. நாடு +என்ற என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----

அ)நாடென்ற ஆ)நாடன்ற இ)நாடு என்ற ஈ)நாடுஅன்ற

5. 'விரிவடைந்த' என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

அ)விரி +வடைந்த ஆ)விரி +அடைந்த இ)விரிவு +அடைந்த ஈ)விரிவ் +அடைந்த

6. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் -------

அ)மகிழ்ச்சி ஆ)துன்பம் இ)வீரம் ஈ)அழுகை

பிரிவு – II

II. பாடல் வரிகளுக்கு ஏற்ப பொருத்துக 4x1=4

7. விடிவெள்ளி - பஞ்சுமெத்தை

8. மணல் - ஊஞ்சல்

9. புயல் - போர்வை

10. பனிமூட்டம் - விளக்கு

பகுதி – 2 பிரிவு – I 5x2=10

III. கீழ்க்காண்பனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி

11. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?

12. 'கண்மணியே கண்ணுறங்கு' பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?

13. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

14. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

15. நான்கு நிலங்கள் என்பன யாவை?

16. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?

17. இன எழுத்துகள் என்றால் என்ன?

பிரிவு – II 3x4=12

IV கீழ்க்காண்பனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி



Scanned with OKEN Scanner

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

18. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

19. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

20. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

21. சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக.

22. கீழ்க்காணும் பிழையான சொற்களை திருத்தி எழுதுக.

அ)தெண்றல் ஆ)கன்டம் இ)நன்ரி ஈ)மன்டபம்

### பகுதி – 3 பிரிவு – I

**V. மனப்பாடப்பகுதி (அடி மாறாமல் எழுதுக)** **2+2=4**

23. 'வெள்ளத்து அனைய' 'சொல்லுக சொல்லில்' என்ற மனப்பாடப்பகுதி திருக்குறள்களை அடிமாறாமல் எழுதுக.

### பிரிவு – II

**VI. கீழ்க்காணும் மொழித்திறன் பயிற்சி வினாக்களில் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளி** **6x2=12**

24. அடைப்பு குறிக்குள் உள்ள சொற்களைச் சேர்த்து கொண்டு புதிய சொற்களை உருவாக்குக. (உண்டு, இல்லை) அ)கல் ஆ)பொன்

25. தொடரை நீட்டி எழுதுக. (அறிவியல், பாடம், நன்றாக)

அ)நான் படிப்பேன்

26. பிழையைத் திருத்தி எழுதுக. அ)வென்ரான் ஆ)கன்டான்

27. அகரவரிசைப்படுத்தி எழுதுக.

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புட்பராகம், மரகதம்

28. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கொண்டு விடுகதைக்கு விடை எழுதுக. (கப்பல், குதிரை, ஏற்றுமதி - இறக்குமதி)

அ)ஒருமதி வெளியே போகும்; ஒருமதி உள்ளே வரும்; இருமதியும் சேர்ந்துவிட்டால் பலநிதியும் சேர்ந்து வரும். அவை என்ன?

ஆ)பேச முடியாத ஓட்டப்பந்தய வீரனுக்கு வாய்க்கு மட்டும் பூட்டு. அவன் யார்?

29. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

அ)ஒரு ஊரில் ஓர் தாத்தா வாழ்ந்து வந்தார்.

ஆ)ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்

30. கலைச்சொல் எழுதுக. அ)Merchant ஆ)Palace

### பகுதி – 4 **2x6=12**

**VII. கீழ்க்காண்பனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி**

31. 'பொங்கல் திருநாள்' என்னும் தலைப்பில் ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

32. இரண்டு நாள்கள் விடுமுறை வேண்டி உன் வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

Scanned with OKEN Scanner

www.freetnbooks.com | FREETNBOOKS